- **மரபுக் கவிதை நூல்:** மனச் சிறகு
- **கவியரங்கக் கவித் தொகுதி :** முகத்துக்கு முகம்
- **சிறுகதை:** அவளும் நட்சத்திரந்தான்
- **வரலாற்று நாவல்:** சோழ நிலா
- **சாகத்திய அகாடமி விருது வெற்றிநூல்:** ஆகாயத்திற்கு அடுத்த வீடு (புதுக்கவிதை.)

**மேற்கோள்:**

- நான் வெட்ட வெட்ட தழைப்பேன்
  இறப்பினில் கண் விழிப்பேன்"

- "மரங்களின் நான் ஏழை
  எனக்கு வைத்த பெயர் வாழை"

- "விழிகள்
  நட்சத்திரங்களை வருடினாலும்
  விரல்கள் என்னவோ ஜன்னல் கம்பிகளோடு தான்"

- "உலகெங்கும் இதழ் இதழாக
  இந்த பூக்கள்

- உன்னுடைய படங்கள் ஊர்வலம் போகின்றன
  நீயேன் தலைகுனிந்தபடி நடுத்தெருவில் நிற்கிறாய்?
- ஆபுத்திரனே
  அமுத சுரபியைத்தான் நீ தந்து சென்றாய்
  இப்போது எங்கள் கையில் இருப்பதோ பிச்சைப் பாத்திரம் **- மு. மேத்தா**

- "இலக்கணச் செங்கோல்
  யாப்புச் சிம்மாசனம்
  எதுகை பல்லக்கு
  மோனைத் தேர்கள்
  தனிமொழிச் சேனை"

## ஈரோடு தமிழன்பன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | ஜெகதீசன் |
| ஊர் | - | சென்னிமலை (ஈரோடு) |
| பெற்றோர் | - | நடராஜன்-வள்ளியம்மாள் |
| காலம் | - | 28.09.1940 |
| சிறப்புப் பெயர் | - | விடிவெள்ளி, படிமக் கவிஞர் |
| இயற்றிய நூல்கள் | - | தோணி வருகிறது, விடியல் விழுதுகள், சூரியபறவைகள், வணக்கம் வள்ளுவா, நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், காலத்திற்கு ஒருநாள் முந்து, பொதுவுடைமைப் பூபாளம், சிலிர்ப்புகள், திரும்பி வந்த தேர்வலம், மன்மினி காடு, நிலா வரும் நேரம், கருவரையிலிருந்து ஒரு குரல், ஊமை வெயில், தீவுகள் கரையேறுகின்றன, சிறகுகள். |
| விருதுகள் | - | வணக்கம் வள்ளுவா (சாகித்ய அகாடமி) தமிழன்பன் |
| கவிதைகள் | - | (மரபுக்கவிதை) தமிழக அரசின் பரிசு. |

**சிறப்புகள்:**

- சென்னை புதுக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் - ஈரோடு தமிழன்பன்
- கவிதை உலகில் இவரை நிலை நிறுத்திய புதுக்கவிதை தொகுப்பு - தோணி வருகிறது (1973)
- சாகித்ய அகாடமி, ஞானபீட அமைப்பும் ஈரோடு தமிழன்பனின் கவிதைகளை மொழிப் பெயர்த்துள்ளன.
- மரபில் பூத்துப் புதுமையில் கனிந்தவர் எனப் புகழப்பட்டவர் - ஈரோடு தமிழன்பன்
- சூரிய பிறைகள் எனும் ஹைக்கூ கவிதைப் படைத்தவர் - ஈரோடு தமிழன்பன்
- மரபுக்கவிதையில் மாபெரும் பெற்றியும் விருதும் பெற்றபிறகு, புதுக்கவிதைத் துறையில் முதன்மை பெற்று முன்னணியில் திகழ்ந்தவர் - ஈரோடு தமிழன்பன்
- சொல்லாட்சியிலும் படிமக் குறியீட்டுப் பிரயோக மாட்சியிலும் சிறந்து விளங்கியவர் - ஈரோடு தமிழன்பன்
- புதியதோர் உலகு செய்யும் செயல்படு மனத்தர், கவியரங்கக் கவிஞர் - ஈரோடு தமிழன்பன்
- வாழ்க்கையையும் மரணத்தையும் ஒப்பிடும் இரண்டு வரிக் கவிதையைக் குறள் போல் இயற்றியவர் -ஈரோடு தமிழன்பன்
- ஆயிரம் அரங்கம் கண்டவர் - ஈரோடு தமிழன்பன் உருவகம், கருத்து சொல் முரண்கள், கனிவான இனிய குரல், சுவையாக உயிர்ப்புடன் படைக்கும் பாங்கு, பாட்டரங்கில் தனித்திறன் காட்டும் தனிபாணி, நாட்டும் நாயகர் - ஈரோடு தமிழன்பன்

**கவிதைகள் :**

❖ வெளியேற்றம், கவிதைக் கலை, ஈழச்சாவுகளும் சவனமற்ற எழுத்துக்களும், உழைப்பின் உயர்வு, புரட்சி, மலர் பூத்தக் குலுங்க வேண்டும், வன்முறை, நீ எங்கே இருக்கிறாய்? அகல்விளக்கம், வரலாற்றுக்கு ஒரு பாடம்.

**மேற்கோள்:**

- சதை திரண்ட
  உன் வார்த்தைகளின் ஈரம்
  கலகலத்து ஓடுகிறது எங்கள்
  உள்ளங்களில்
- வாழ்க்கை அந்நிய மொழியில்
  மரணம் தாய் மொழியில் **- ஈரோடு தமிழன்பன்**

## கவிக்கோ அப்துல் ரகுமான்

| | | |
|---|---|---|
| ❖ ஊர் | - | மதுரை |
| ❖ காலம் | - | 02.11.1937 |
| ❖ பெற்றோர் | - | உருதுக் கவிஞர் மஹி (எ) சையத் அஹமத், ஜைனத் பேகம் |
| ❖ இயற்றிய நூல்கள் | - | பால் வீதி, நேயர் விருப்பம்,சொந்தச்சிறைகள், கரைகளே நதியாவதில்லை, தீபங்கள் எரியட்டும், விலங்குகள் இல்லாத கவிதை, ஆலாபனை, பித்தன், சுட்டுவிரல், தீக்குச்சிகள், அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப் புள்ளி அல்ல, உன் கண்ணில் தூங்கிக் கொள்கிறேன், புதுக்கவிதையின் குறியீடு |
| ❖ கட்டுரைகள் | - | சிலந்தியின் வீடு, பறவையின் பாதை, இல்லையிலும் இருக்கிறான், எம்மொழி செம்மொழி, தேவகானம் |
| ❖ பதிப்பித்த நூல்கள் | - | குணங்குடியார் பாடல் கோவை |
| ❖ விருதுகள் | - | பாரதிதாசன் விருது, தஞ்சைப் பல்கலைக்கழத்தின் தமிழ் அன்னை விருது |

**சிறப்புகள்:**

❖ மதுரை தியாகராசர் கல்லூரியில் பயின்றவர் - அப்துல் ரகுமான்

- வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்
- மரபுக்கவிதையின் வேர் பார்த்தவர் புதுக்கவிதையின் மலர் பார்த்தவர் - கவிக்கோ அப்துல் ரகுமான்
- புதுமை மணங்கமழும் படைப்புகளை தந்தவர் - அப்துல் ரகுமான்
- அப்துல் ரகுமானின் சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல் -ஆலாபனை
- கவிக்கோ என்ற புனைப் பெயரால் அழைக்கப்படுபவர் - அப்துல் ரகுமான்
- மாணவர்களை புதுக் கவிதை எழுதத் தூண்டியவர் - அப்துல் ரகுமான்
- தொன்மம் என்ற இலக்கிய யுக்தியை மிகுதியாக கையாண்டவர் - அப்துல் ரகுமான்
- பால்வீதி என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டவர் -அப்துல் ரகுமான்
- கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் மூலம் வெளியிட்டவர் - அப்துல் ரகுமான்
- தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர் - அப்துல் ரகுமான்
- தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை இயற்றியதிலும் பரப்பியதிலும் பெறும் பங்கு பெற்றவர் - அப்துல் ரகுமான்
- எளிய சொற்களால் இனிமைதரும் கவிதையைப் புனையும் ஆற்றல் மிக்கவர் - அப்துல் ரகுமான்
- திருக்குறளை புதுக்கவிதையாக்கி அழகு பார்த்தவர் - அப்துல் ரகுமான்
- சிலேடை வார்த்தைகளாலும், கவியரங்கக் கவிதைகளாலும் 1960க்கு பின் கவிதை உலகில் சிறந்து விளங்கியவர் - அப்துல் ரகுமான்
- அறிவுமதி உள்ளிட்ட இளம் தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கியவர் - அப்துல் ரகுமான்
- முனைவர் மா. இராசமாணிக்கனார், ஔவை துரைசாமி, அ. கி. பரந்தாமனார் அவ்வை நடராசன், அ.மு. பரமசிவானந்தம் ஆகிய தமிழறிஞர்களிடம் பயின்றவர் - அப்துல் ரகுமான்
- தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதும் தியாகராசர் நடத்திய தமிழ்நாடு என்னும் நாளிதழில் திருத்துநராகச் சிலகாலம் பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்
- வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் 1961 ஆம் ஆண்டு முதல் சிற்றுரையாளர், விரிவுரையாளர், பேருரையாளர், பேராசிரியர் எனப் படிப்படியாக உயர்ந்து 1991 ஆம் ஆண்டில் விருப்ப ஓய்வு பெற்றவர் - அப்துல் ரகுமான்
- 20 ஆண்டுகள் தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்